## ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2012

### 1. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2005 இன் 4 ஆம் இலக்க ஆங்கிலப் பட்டப் பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டத்தின் 4 (சீ) மற்றும் (ஈ) ஆம் பிரிவுகளின்படி மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட குறுகிய கால பாடநெறிகளிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் தொழிற்பாடு அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 4,508,788 பற்றாக்குறையினை விளைவித்திருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த பற்றாக்குறை ரூபா 1,942,815 ஆக இருந்தது. மீண்டெழும் செலவினத்திற்காகப் பெறப்பட்ட ரூபா 6,590,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,081,211 மிகையாக மாற்றப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறையானது அவ்வாண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக பெறப்பட்ட ரூபா 3,187,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் ரூபா 1,244,185 ஆன மிகைக்கு மாற்றப்பட்டிருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 837,026 ஆன அதிகரிப்பைக் காட்டியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நிறுவனமானது மீளாய்வாண்டின் போது ஆழமான இலக்கிய வாசிப்புத் திறனில் குறுகிய காலப் பாடநெறியொன்றினை நடாத்தியிருந்தது. எவ்வாறாயினும், கற்கைநெறியை விளம்பரப்படுத்திய பின்னர் பாடநெறியினை ஆரம்பித்தல் இரண்டு தடவைகள் பிற்போடப்பட்ரெுந்தன. பாடநெறியிலிருந்தான பாதிடப்பட்ட வருமானம் ரூபா 540,000 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது பாடநெறியிலிருந்து வருமானமாக ரூபா 242,800 மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பு பொறுப்பும் நல்ல ஆளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2009 முதல் 2012 வரையான காலத்திற்காக நிறுவகத்தின் கூட்டிணைந்த திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு கால அடிப்படையில் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

(அ) 2012 ஆம் அண்டிற்கான செயல் நடவடிக்கைத்திட்டம் கூட்டிணைந்த திட்டத்துடன் தொடர்புபட்டிருக்கவில்லை. ஆங்கில மொழி போதனையில் பட்டப்பின்படிப்பு சான்றிதழ் பாடநெறி தொடர்பான நடவடிக்கை 2012 ஆம் ஆண்டின் போது தொடங்கி அமுலாக்குவதற்கு பட்டியல் படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிறுவனத்தின்படி இது 2014 வரை பிற்போடப்பட்டிருந்தது.

(ஆ) இறுதிப் பரீட்சைகள், மதிப்பாய்வு மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் போன்றவாறான நடவடிக்கைகள் குறித்த காலத்திற்குள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டாவது மொழியாக ஆங்கில இலக்கியத்தினை கற்பித்தலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா/ கலை முதுமானி பட்டம் வழங்குவதற்கான பிரேரணை 2012 மார்ச் மாதத்தில் கல்விச் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் சபை அங்கீகாரமானது ஒன்பது மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2012 திசெம்பர் 21 இல் வழங்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், பாடநெறி 2013 மார்ச் இறுதி வரையும் தொடங்கி அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3. உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின்போது நிறுவகத்தின் நடவடிக்கைகளில் 60 சதவீதமானவை பரிசோதிக்கப்பட வேண்டுமென உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒரு உள்ளக கணக்காய்வு ஐய வினா மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

**4.4. பாதீட்டுக் கட்டுப்பாடு**

உள்ளபடியான வருமானம் பாதிடப்பட்ட வருமானத்தில் 114 சதவீதத்தை விஞ்சியிருந்ததுடன் உள்ளபடியான மீண்டுடெமும் செலவினம் பாதிடப்பட்ட மீண்டெழும் செலவினத்தின் 33 சதவீதத்திற்கு குறைந்திருந்தது. ஆதலால் பாதீடானது நிதிமுகாமைத்துவ கட்டுப்பாட்டிற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென சுட்டிக்காட்டப்படுகின்றது.

**5.5 பாராளுமன்றத்தில் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்**

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்கான நிறுவகத்தின் வருடாந்த அறிக்கைகள் 2013 மார்ச் 31 வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாடநெறிகளை நடாத்தலும் பெறுபேறுகளை வெளியிடுதலும்
(ஆ) பதவியணியினர்களைச் சேர்த்தல்
(இ) பாதீடு